**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்.**

**முன்னிலை: திரு. கே. ராஜேஷ்கண்ணன், பி.ஏ., பி.எல்.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர்.**

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் நாள் திங்கட்கிழமை

**வழக்கிடை விண்ணப்பம் எண்.388/2017 ன்**

**முதலேற்பு வழக்கு எண்.54/2014**

1. வி.கே.மணி
2. கே.பலராமன் ..மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

வெங்கடேசன் .. எதிர்மனுதாரர்/வாதி

லட்சுமி ..எதிர்மனுதாரர்/4 ம் பிரதிவாதி

1. ஜீனத்
2. ஆர். சேகர்
3. எம். அலிமா
4. ஜே. அஜித்தா
5. எம். ரபிநிஷா
6. கே. செல்வம்
7. ஏ. சதீஷ்
8. எஸ். செந்தில்
9. கே. முருகையன்
10. பி. ரமேஷ்
11. தமிழ்நாடு மெர்கன்டைல் பேங்க் கடலூர். ..9 முதல் 19 தரப்பினர்கள் சேர்க்கப்படவேண்டியவர்கள் /எதிர்மனுதாரர்கள்

WEB COPY

இந்த மனுவானது 23.11.2017 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் எல். தேவநாதன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ராம்மோகன் அவர்களும், 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி. பூபாலன், அவர்களும் முன்னிலையாகியும், 5 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஆஜராகததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், 8 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ராம்சிங் அவர்கள் முன்னிலையாகியும், 11 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜெ. ராமநாதன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 7 மற்றும் 9 ம்

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. டி. கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 மற்றும் பிரிவு 151-ன்கீழ், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் 9 முதல் 19 பிரதிவாதிகளை தரப்பினராக சேர்க்க அனுமதி கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-.**

WEB COPY

மனுதாரர், வழக்கில் 2ம் பிரதிவாதி. 1ம் மனுதாரர் சகோதரர் என்றும், 4ம் பிரதிவாதி இளைய சகோதரி என்றும், மற்ற பிரதிவாதிகள் அசல் வழக்கில் தோன்றா தரப்பினராக உள்ளார்கள். 1ம் எதிர்மனுதாரர் மேற்படி வழக்கை விளம்புகை பரிகாரம் மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும், செயலுறுத்துப் பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கிற்கு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்து எதிர்கட்சி செய்து வருகிறார்கள். தாவா சொத்தானது ஆதியில் கண்ணம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். பிரதிவாதிகளின் பாட்டி மற்றும் பாட்டி கண்ணம்மாள் மற்றும் தாயாரம்மாள் ஆகியோர் வேறுபட்டவர்கள் ஆவார்கள். மேற்படி கண்ணம்மாள் உயிருடன் இருந்தபோதே அவரது ஒரே மகளான தாயராம்மாள் பெயருக்கு 12.12.1952 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார். மேற்படி தாயாரம்மாள் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தாயார் மற்றும் 6, 7 பிரதிவாதிகளின் பாட்டியும் ஆவார். மேற்படி தாயாரம்மாள் உயிருடன் இருந்தவரை தாவா சொத்தை ஆண்டு அனுபவித்து வந்துள்ளார். மேற்படி சொத்திற்கு கிஸ்து ரசீதுகள் செலுத்தியுள்ளார். தாவா சொத்திற்கான வில்லங்கசான்று மற்றும் அடங்கல் ஆகியவற்றை மேற்படி வழக்கில் தாக்கல் செய்துள்ளதாகவும், அவைகள் செட்டில்மெண்ட் பத்திரம் பி.சா.ஆ.1 ஆகவும், அடங்கல் பதிவேடு பி.சா.ஆ.2 ஆக வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் மேற்படி வழக்கை கடந்த

07.02.2014 ம் தேதியன்று தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்தபிறகு மேற்படி எதிர்மனுதாரர் கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் ஆவணங்களை காணவில்லை என்று பொய்யாக புகார் அளித்து தாவா சொத்தை எதிர்மனுதாரர் விருப்பத்திற்கு ஏற்ப பொய்யாக ஏற்பாடுகள் செய்துள்ளார். இந்நிலையில் மேற்படி வழக்கு தாக்கல் செய்தபிறகு 1 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்துக்கள் விற்கப்பட்டுள்ளன. 11 ம் எதிர்மனுதாரர் தமிழ்நாடு மெர்கன்டைல் பேங்க் தரப்பில் கடனுறுதி செய்துள்ளது. மேலும் மேற்படி வழக்கு தாவா சொத்தின் உண்மையான மதிப்பை காட்டாமல் தவறாக நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே தாவா சொத்துக்கள் வழக்கு நிலுவையில் உள்ளபோது சொத்துக்களை விற்பனை செய்துள்ளதால் மேற்படி வழக்கு முதல் வழக்கு கோட்பாட்டின் கீழ் தடைபட்டுள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளபோது தாவா சொத்துக்கள் விற்கப்பட்டுள்ளதால் நிகழ் வழக்க கோட்பாடு என்ற கட்சியினால் தடைபட்டுவிடும் என்ற காரணத்தால் புதிதாக தரப்பினர்களை சேர்க்க வேண்டுமென்றும், எனவே 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள் மேற்படி வழக்கில் 9 முதல் 19 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிட வேண்டுமென்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

**3. 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்-**

**இம்மனு தகுதியற்றது, தள்ளுபடிக்கு அருகமானது. பிரமாண பத்திரிக்கை பத்தி 3ல் கூறியுள்ள சங்கதிகள் தவறு. கண்ணம்மாள் என்பவர் தாயார் அம்மாளுக்கு அறுதியாவணம் எழுதி வைத்ததாக சொல்வது பொய். பத்தி 4, 5ல் கூறியுள்ள சங்கதிகள் சரியல்ல என்றும், இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவேண்டிய நபர்கள் தேவையற்ற நபர்கள ஆவார்கள். கண்ணம்மாள் என்பவர் சின்னராஜி படையாட்சி என்பவரின் வைப்பாட்டி ஆவார். மேற்படி கண்ணம்மாள் அவரது மகள் தாயாரம்மாள் பெயருக்கு 12.09.1952ல் எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி மு.வ.70/53 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் மேற்படி கண்ணம்மாளுக்கு உரிமையில்லாதபோது, தாயாரம்மாள் பெயருக்கு அறுதியாவணம் எழுதிவைப்பதற்கு அவருக்கு உரிமையில்லை. மேற்படி அறுதியாவணம் 1ம் எதிர்மனுதாரர்/வாதியை கட்டுப்படுத்ததாது என்றும், இந்நிலையில் சின்னராஜி படையாட்சியின் மனைவி லட்சுமி அம்மாள் அவரது மகன் நடராஜன் ஆகியோர் கண்ணம்மாளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி**

மு.வ.713/1967 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்கானது எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்ப்பானது. அந்த தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீட்டு எண்.67/1972 தாக்கல் செய்யப்பட்டு, அந்த மேல்முறையீடும் 21.07.1972ல் எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்வு காணப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு உரிமையில்லை என்றும், இந்த வழக்கை காலதாமதம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேயே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகவே மேற்படி மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதுதானா? என்பதேயாகும்.

5. பிரச்சனைக்கு தீர்வு-

WEB COPY

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதுதானா? என்று பரிசீலிக்கும்பொழுது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 2 முதல் 12 எதிர்மனுதாரர்கள் புதிதாக தரப்பினராக சேர்க்க வேண்டுமென்றும் மேற்படி வழக்கு விளம்புகை பரிகாரம் மற்றும் நிலைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும், 1ம் எதிர்மனுதாரர்/ வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தானது கண்ணம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், கண்ணம்மாள் மற்றும் தாயாரம்மாள் வேறுபட்டவர்கள் என்றும், கண்ணம்மாள் உயிருடன் உள்ளபோது கடந்த 12.12.1952ம் தேதியன்று தாயார் அம்மாளுக்கு ஒரு அறுதியாவணம் எழுதிவைத்துள்ளார் என்றும், தாயாரம்மாள் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தாய் மற்றும் 6,7 பிரதிவாதிகளின் பாட்டி என்றும், அந்த அறுதியாவணத்தின் அடிப்படையில் தாயாரம்மாள் தாவா சொத்தை அவர் உயிருடன் உள்ள வரை ஆண்டு அனுபவித்து வந்துள்ளார் என்றும், கிஸ்து ரசீதுகள் செலுத்தியுள்ளார் என்றும், அந்த அறுதியாவணம் மேற்படி வழக்கில் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் கடந்த 07.02.2014ம் தேதியன்று வழக்கு தாக்கல் செய்தார் என்றும், வழக்கிற்குப் பிறகு கடலூர் பொது புதுநகர் காவல் நிலையத்தில் பொய்யாக புகார் அளித்து தாவா சொத்தை எதிர்மனுதாரர் விருப்பத்திற்கு ஏற்பாடுகள் செய்தார் என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகு, 1 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்துக்கள் விற்கப்பட்டுள்ளன என்றும், 11ம் எதிர்மனுதாரர் தமிழ்நாடு மெர்கன்டைல் பேங்கில்

கடனுறுதி செய்துள்ளார் என்றும், வழக்கு நிலுவையில் உள்ளபோது சொத்துக்கள் மாற்றம் செய்துள்ளது முதல் வழக்கு கோட்பாட்டின் கீழ் தடைப்பட்டுள்ளது என்றும், இருப்பினும், 1 முதல் 11 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் 9 முதல் 19 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமென்றும், அவர்கள் தேவையான தரப்பினர்கள் என்றும் வாதிடப்பட்டது.

6. அதற்கு மாறாக, 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மேற்படி மனுவானது சட்டப்படி தள்ளுபடிக்கு அருகமுடையது என்றும், பிரமாண பத்திரிக்கை பத்தி 3ல் உள்ள சங்கதிகள் தவறு என்றும், கண்ணம்மாள் தாயார் அம்மாளுக்கு அறுதியாவணம் எழுதி வைத்ததாக சொல்வது பொய் என்றும், பத்தி 4, 5ல் கூறியுள்ள சங்கதிகள் சரியல்ல என்றும், இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவேண்டிய நபர்கள் தேவையற்ற நபர்கள் என்றும், கண்ணம்மாள் என்பவர் சின்னராஜி படையாட்சியின் வைப்பாட்டி என்றும், அவரது மகள் தாயாரம்மாள் பெயருக்கு விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி மு.வ.70/53 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றும், அந்த வழக்கு தள்ளபடி செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகவே மேற்படி அறுதியாவணமானது 1ம் எதிர்மனுதாரர்/வாதியை கட்டுப்படுத்ததாது என்றும், இந்நிலையில் சின்னராஜி படையாட்சியின் மனைவி லட்சுமி அவரது மகன் நடராஜன் ஆகியோர் கண்ணம்மாளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி மு.வ.713/1967 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றும், அந்த வழக்கானது எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றும், அந்த தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டு, அந்த மேல்முறையீடும் எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்வு காணப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு உரிமையில்லை என்றும், இந்த வழக்கை காலதாமதம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேயே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகவே மேற்படி மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதிடப்பட்டது

7. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. மேற்படி வழக்கானது 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் விளம்புகை பரிகாரம் மற்றும் நிலைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 1 முதல்

WEB COPY

8 பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1, 2 பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள். 3 முதல் 8 பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக உள்ளார்கள். இந்நிலையில், மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள் அதாவது தரப்பினர்களாக சேர்க்கப்படவேண்டிய நபர்களை பிரதிவாதிகளாக, அதாவது 9 முதல் 19 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமென்று மனுதாக்கல் செய்துள்ளது, அதாவது மேற்படி மனுவில் வழக்கு நிலுவையில் உள்ளபோது 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், 11வது எதிர்மனுதாரர் கடன் வசதி செய்துள்ள காரணத்தால் அவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டுமென்று மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளபோது கிரையம் பெற்றதால் நிகழ் வழக்கு கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்று வாதிடப்பட்டுள்ளது.

8. ஆனால் இந்த வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/வாதியை தவிர மற்ற எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர்/வாதி தாவா சொத்து சம்மந்தமாக 2 வழக்குகள் ஏற்பட்டுள்ளது என்றும், அவைகள் முறையே மு.வ.70/1953 மற்றும் மு.வ.713/1967 என்றும், அந்த இரண்டு வழக்குகளும் எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்வாகியுள்ளது என்றும், இந்நிலையில் மேற்படி வழக்கை காலதாமதம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேயே மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனு வனையப்பட்ட விதம் சரியானதுதான் என்றும், வழக்கு நிலுவையில் உள்ளபோது தாவா சொத்துக்கள் விற்கப்பட்டுள்ள காரணத்தால் நிகழ் வழக்கு கோட்பாடு என்ற கட்சியினால் தடைபடும் என்ற நிலையிலும், புதிதாக தரப்பினர்களை சேர்க்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குறுந்தலைப்பு, அதாவது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 1, 2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி என்றும் குறிப்பிடப்பட்டள்ளது. சேர்க்கப்பட வேண்டிய நபர்கள் எதிர்மனுதாரர்கள் என்று 1 முதல் 11 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்படும்பொழுது, வழக்குரையில், வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் 1 முதல் 8 பிரதிவாதிகள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். 8 பிரதிவாதிகளும் மேற்படி மனுவில் தரப்பினராக உள்ளார்களா? என்பதை பரிசீலிக்கும்பொழுது, 1, 2 பிரதிவாதிகள் மனுதாரர்களாக உள்ளார்கள். 4ம் பிரதிவாதி இந்த மனுவில் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளார். 3, 5, 6, 7, 8

WEB COPY

பிரதிவாதிகள் இம்மனுவில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. இந்த வழக்கில் புதிதாக ஒரு நபர் சேர்க்கப்படும் பொழுது, அந்த நபர்களை இந்த வழக்கில் சேர்க்கப்படுவது சம்மந்தமாக வழக்கில் உள்ள அனைத்து தரப்பினர்களுக்கும் வாய்ப்பளித்து அவர்களின் கட்சி கேட்கப்பட வேண்டும். ஆனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் 3, 5, 6, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பினராக சேர்க்கப்படாமல் குறுந்தலைப்பே தவறாக குறிப்பிடப்பட்டு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த சங்கதிகளை கூர்ந்து பரிசீலிக்கும்பொழுது, ஒரு வழக்கிடை மனுவில் குறுந்தலைப்பு என்பது வழக்குரை சம்மந்தப்பட்டு, வழக்கரை சம்மந்தப்பட்ட தரப்பினர்கள் மனுவில் தரப்பினராக சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படாத பட்சத்தில் மேற்படி மனு ஏற்புடையதல்ல என்று தீர்மானிக்கப்படுகிறது. அதாவது உரிமையில் விதி முறை தொகுப்பு விதி 29ல் இடைக்கால மனுக்கள் சம்மந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள குறுந்தலைப்பு இடைக்கால மனுவிலும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மனுதாரர்கள் மனுவை பரிசீலிக்கும்பொழுது, இந்த மனுவில் அவ்வாறு வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினர்களின் விவரங்கள் குறிப்பிடப்படாத காரணத்தால் மேற்படி மனுவானது சட்டப்படி சரிவர வனையப்படவில்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில், மேற்படி மனு வனையப்பட்ட விதம் சரியல்ல என்ற காரணத்திற்கான இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி, தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கடலூர்

**இருதரப்பிலும் சாட்சிகள், சான்றாவணங்கள்-** இல்லை

**கூ.மா.உ.நீ.**
கடலூர்

WEBCOPY

வரைவு/சீரான உத்தரவு

வ.வி.எண்.388/2017 ன்

மு.வ.எண்.54/2014

நாள்: 27.11.2017

WEB COPY